Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, NOVEMBER 20, 2023

திங்கட்கிழமை நவம்பர் 20, 2023 | ஒளி: 09 கதிர் 131 | பக்கம்:06 | நகரப்பதிப்பு* | FREE



## சீனி, சம்பாவுக்கு கடும் தட்டுப்பாடு


அரிசி மற்றும் சீனிக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயம் செய்யும் அரசாங்கத்தின் முயற்சியால் தற்போது சந்தையில் சீனி மற்றும் சம்பா அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், சீனி மற்றும் அரிசி கொள்வனவு செய்ய முயன்ற வாடிக்கையாளர்களும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

தொடர்ச்சி P2

### இந்தியாவின் மீது இலங்கை அரசுக்கு பயம் வரவேண்டுமாயின்

# "சுட்டு வீழ்த்தவும்"



இந்திய கடற்பகுதியில் எல்லைத் தாண்டி வரும் இலங்கை கடற்படையினரையும், கடற்கொள்ளையர்களையும் இந்திய அரசு பாரபட்சமின்றி சுட்டு வீழ்த்தினால் தான் இந்தியாவின் மீது இலங்கை அரசுக்கு பயம் வரும் என மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் (மதிமுக) முதன்மைச் செயலாளர் துரை வைகோ தெரிவித்துள்ளார்.

"எல்லைத் தாண்டி மீன் பிடிக்கச் சென்றதாக கூறி, பாம்பன் மீனவர்கள் 22 பேர் இலங்கை கடற்படையினரால் சனிக்கிழமை (18) கைது செய்யப்பட்டு தற்போது அவர்கள் விடுவிக்கப்பட்டு இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதும், கொல்லப்படுவதும், அவர்களுடைய படகுகள், மீன்பிடி வலைகள், திசைகாட்டும் கருவிகள் உள்ளிட்ட உடைமைகள் பறிக்கப்படுவதும் வாடிக்கையாக உள்ளது.

இலங்கை கடற்படையினர் மட்டுமல்லாது கடற்கொள்ளையர்கள் என்ற பெயரில் அந்த நாட்டு குண்டர்களாலும் தமிழக மீனவர்கள் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றார்கள். கடந்த நாற்பது வருடங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். தமிழக மீனவர்களின் பலநூறு கோடி ரூபாய் மதிப்பிலான படகுகள் இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டும், அழிக்கப்பட்டும் இருக்கின்றன.

கொரோனா கொடுந்தொற்று காலத்தில் அதிகம் பாதிப்புக்கு உள்ளான சமூகங்களில் மீனவர் சமூகமும் ஒன்று. இயற்கை பேரிடரின் போதும், மீன்பிடி தடைக் காலங்களின் போதும் அவர்களால் கடலுக்குள் செல்ல முடியாது. பல்வேறு சூழல்களை கடந்து மீன்பிடிப்பதற்காக கடலுக்கு செல்லும் போது, இலங்கை கடற்படையினரின் அட்டூழியத்தால் தமிழக மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரங்களை முற்றிலும் இழந்து தவிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறார்கள். இலங்கை அரசு கடும் பொருளாதார நெருக்கடியில் மூழ்கிய போது தமிழக அரசு பலகோடி ரூபாய் மதிப்பிலான உணவு, மருந்து பொருட்களை அனுப்பி உதவியது.

அங்குள்ள தமிழர்கள் மட்டுமல்லாது சிங்களவர்களுக்கும் மனிதாபிமான அடிப்படையில் அண்ணன் தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு உதவியிருக்கிறது. இந்திய அரசு இதுவரை 32,000 கோடி ரூபாய் இலங்கைக்குக் கடனுதவி வழங்கியிருக்கிறது. மேலும், சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு உதவி செய்வதற்கும், உலக வங்கி கடன் வழங்குவதற்கும் இந்தியா சான்றிதழ் வழங்கியிருக்கிறது.

ஆனால், இலங்கை கடற்படை எந்தவித மனிதாபிமானமும் இன்றி தொடர்ந்து தமிழக மீனவர்களை கொன்று குவித்தும், கைது செய்தும், அச்சுறுத்தியும் வருவது வாடிக்கையாகி விட்டது.

தொடர்ச்சி P2



## சீன ஜனாதிபதியின் தூதுக்குழு வந்தது

சீன ஜனாதிபதி சீ ஜின் பிங்கின் விசேட தூதுவர் ஷென் ஹிகின் உள்ளிட்ட தூதுக்குழுவினர் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

அக்குழுவினர், எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நாட்டில் தங்கியிருக்கவுள்ளதுடன், விசேட தூதுவர் ஷென் ஹிகின் உள்ளிட்ட குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளிட்ட அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகளுடன் இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளனர்.

தொடர்ச்சி P2

### சம்பள உயர்வு விவகாரம்

## ஆராய்கிறது இ.தொ.கா

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உயர்மட்ட குழு திங்கட்கிழமை (20), சந்தித்து ஆராயவுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான



செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## "திருநர்களை கேலி செய்வதை நிறுத்து"

■ பு.கஜிந்தன்

திருநர்களின் விழிப்புணர்வு வார்த்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக திருநர்கள் ஞாயிற்றுக்கிழமை (19)போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "பொது இடங்களில் திருநர்களை கேலி செய்வதை நிறுத்துங்கள்", "மனிதரை மனிதராக மதியுங்கள்", "திருநர்களுக்கான மருத்துவ சேவையை சரியான முறையில் வழங்குங்கள்", "திருநர்களின் உரிமையும் மனித உரிமையே", "ஊடகங்களில் திருநர்களை தவறாக விமர்சிப்பதை நிறுத்துங்கள்" உள்ளிட்ட வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தி, கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



## "பூகோள அரசியல் குழப்பங்களுக்கு இடம் கொடுக்கப் போவதில்லை"

■ யது பாஸ்கரன்

பூகோள அரசியல் குழப்பங்களுக்கு ஒருபோதும் நாங்கள் ஒருபோதும் இடமளிக்க போவதில்லை என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சியில், ஞாயிற்றுக்கிழமை (19) கிராமிய மீனவ அமைப்புகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



## பதவி விலகல்

இலங்கை மத்திய வங்கியின் நாணய சபை உறுப்பினர் பதவியிலிருந்து ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்ஜீவ ஜயவர்தன விலகியுள்ளார்.

தற்போதைய வெற்றிடத்திற்கு ஜனாதிபதியினால் புதிய உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்படுவார் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.



## ஐந்தாவது முறையாக மூழ்கிய அக்குறணை

■ மொஹொமட் ஆஸிக்

மலையகத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக கண்டி யாழ்ப்பாணம் ஏ -9 வீதியில் அமைந்துள்ள அக்குறணை நகரம் நீரில் மூழ்கியதுடன், வீதியில் வாகன போக்குவரத்துக்கும் தடை ஏற்பட்டது. கடந்த ஒரு மாத காலத்திற்குள் ஐந்தாது முறையாகவும் அக்குறணை நகரம் நீரில் மூழ்கியமை குறிப்பிடத்தக்கது.

## படகு கவிழ்ந்து மாயமான நால்வரும் பத்திரமாக மீட்பு

கடலுக்குச் சென்ற படகு கவிழ்ந்ததில் ஜப்பானியப் பிரஜை உட்பட நால்வர் காணாமல் போன நிலையில் அவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாரவில, முகுதுகட்டுவ பிரதேசத்தில் சனிக்கிழமை 18ஆம் திகதி மாலை 05.30 மணியளவில் ஜப்பானியர் உட்பட 05 பேர் சிறிய டிங்கி படகில் கடலுக்கு மீன்பிடிக்கும்போது மழை பெய்ததால் படகு கடலில் கவிழ்ந்தது.

படகை ஓட்டிச் சென்றவர்கள் இது குறித்து கரையில் இருந்த மற்றொரு மீனவருக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்துள்ளனர். அதன்படி படகு கவிழ்ந்ததாகக் கூறப்படும் பகுதிக்குச் சென்ற மற்றொரு குழுவினர் படகை ஓட்டி வந்தவர்களை மீட்டு கரைக்குக் கொண்டு வந்தனர்.

எனினும், இதன்போது படகில் இருந்த ஏனைய நான்கு பேரும் காணாமல் போயுள்ளதாகப் படகின் உரிமையாளர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், காணாமல் போனவர்களைத் தேடும் நடவடிக்கையைக் கடற்படையினரின் உதவியுடன் முன்னெடுத்திருந்த நிலையில், குறித்த நால்வரும் மீட்கப்பட்டுக் கரைக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## களனிதிஸ்ஸவுக்கு 6 வாரங்களுக்கு பூட்டு

பராமரிப்பு பணிகள் காரணமாக 6 வாரங்களுக்கு மின்னுற்பத்தி நிலையம் மூடப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் பொறியியல் பிரிவு, வெள்ளிக்கிழமை (17) தெரிவித்துள்ளது. அதனால் தேசிய மின் கட்டமைப்புக்கு 165 மெகாவோட் மின் இழப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, தொழில்நுட்ப கோளாறு காரணமாக செயலிழந்த நுரைச்சோலை லக்விஜய அனல் மின் நிலையத்தின் இரண்டாவது மின் உற்பத்தி இயந்திரத்தைச் செயற்படுத்த சுமார் 05 நாட்கள் செல்லுமென மின்சார சபை எதிர்வு கூறியுள்ளது.

தொடர்ச்சி P2

## பிக்குவால் குத்தப்பட்ட கான்ஸ்டபிள் மரணம்

மாத்தறை மாவட்டத்தின் தெனியாய பிரதேசத்தில் பௌத்த பிக்கு ஒருவரின் கத்திக்குத்துக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் உயிரிழந்துள்ளார். தெனியாய பிரதேசத்தில் காதல் விவகாரத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைக் கத்தியால் குத்திய 18 வயதுடைய பிக்குவை கைது சம்பவமொன்று வியாழக்கிழமை (16) பதிவாகியது.

காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர், சந்தேக நபரான பிக்குவின் சகோதரியுடன் காதல் தொடர்பில் இருந்துள்ளார். குறித்த பெண்ணை சந்திப்பதற்காக அவருடைய வீட்டிற்குச் சென்றுள்ள போது சந்தேக நபரின் அழைப்பின் பிரகாரம் பல்லேகம கங்கொட வீதியில் அமைந்துள்ள சம்போதி முதியோர் இல்லத்திற்கு அருகில் சென்றுள்ளதாகவும் ,

தொடர்ச்சி P2



## "மின்சார உற்பத்தி சார்ந்த பிரச்சினை உக்கிரமாகும்"

அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ள மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பான சட்ட மூலம் பிற்போக்கு சட்ட மூலமாகும். இச்சட்டமூலம் மின்சார உற்பத்தி சார்ந்த பிரச்சினை மேலும் உக்கிரமாக்கும். இது மற்றுமோர் அரசியல் நியமனம் சர்ந்த விடயமும் விளைவுகளை அடையாத விவகாரமுமாகும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சட்டத்தரணி அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

இச்சட்டமூலத்தை சமர்ப்பிக்க வேண்டாம் என்று நாம் கூறுகிறோம். இலங்கை மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பான முன்மொழிவுகள் அவசியம் நாமும் உடன்படுகிறோம். என்றாலும் அரசாங்கம் சமர்ப்பிக்க எதிர்பார்க்கும் சட்ட மூலம் உள்ள பிரச்சினைகளை மேலும் அதிகரித்து மாபியாவை ஊக்குவிப்பதாக அமையும் என்றார். கொழும்பில் உள்ள எதிர்க்கட்சி அலுவலகத்தில், ஞாயிற்றுக்கிழமை (19) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருளாதார வங்குரோத்துக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யார் என்பதை விளாவாரியாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. சுதந்திரத்திற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த பிரதான கட்சிகளே இந்நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்றும் தாம் பொறுப்பல்லர் போன்றும் காட்டிக்கொள்ளும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் உயர் நீதிமன்றம் நீண்ட காரண காரியங்களுடன் தீர்ப்பை வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2

## சைலன்சரை அகற்றி ஓட்டினால் சிக்கல்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

மோட்டார் வாகனங்களில் சைலன்சர் குழாயை அகற்றி பெரும் சப்தத்துடன் மோட்டார் சைக்கிள்களை



செலுத்துவோர், பொது மக்களின் உதவியுடன் கைது செய்து அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதென காத்தான்குடி பொலிஸாருக்கும் காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்துக்கும் இடையில் நடை பெற்ற சந்திப்பின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “சுட்டு வீழ்த்தவும்”

ஒன்றிய அரசு இதுவரை இப்பிரச்சினையில் தலையிட்டு நிரந்தர தீர்வு காண்பதற்கு முயற்சிக்கவில்லை.

தமிழக மீனவர்களின் நலன்களைப் பாதுகாப்பது ஒன்றிய அரசின் கடமை.

பேச்சுவார்த்தை பலனளிக்கவில்லை என்றால், இந்தியக் கடற்பகுதியில் எல்லைத் தாண்டி வரும் இலங்கை கடற்படையினரையும், கடற்கொள்ளையர்களையும் இந்திய அரசு பாரபட்சமின்றி சுட்டு வீழ்த்த வேண்டும். அப்போது தான் இந்தியாவின் மீது இலங்கை அரசுக்குப் பயம் வரும். தமிழக மீனவர்கள் தாக்குதலுக்கும், கைது நடவடிக்கைகளுக்கும் உள்ளாவது இதுவே கடைசி முறையாக இருக்க வேண்டும். தமிழர்களின் மீன்பிடி உரிமையை நிலைநாட்டவும், கச்சத்தீவை மீட்கவும் ஒன்றிய அரசு இப்பிரச்சினையில் தலையிட்டு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.” என்றார்.

# சீனி, சம்பாவுக்கு...

2020ஆம் ஆண்டு முதல் இறக்குமதி செய்யப்படும் சீனி ஒரு கிலோ கிராம் ஒன்றிற்கான விசேட சரக்கு வரியை 25 சதத்தில் இருந்து 50 ரூபாவாக அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வரி உயர்வால், பல வியாபாரிகள் சர்க்கரை விலையை உயர்த்தியதால், அதை கட்டுப்படுத்த அதிகபட்ச சில்லரை விலையை அரசாங்கம் விதிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அதாவது ஒரு கிலோ கிராம் வெள்ளை சீனி 275 ரூபாவாகவும், ஒரு கிலோ கிராம் சிவப்பு சீனி 330 ரூபாவாகவும் உள்ளது.

புறக்கோட்டை உள்ள மொத்த வியாபாரிகளிடம் தற்போதுள்ள சீனி தட்டுப்பாடு குறித்துக் கேட்டபோது, தங்களுக்கு சீனி கையிருப்பு விற்பனைக்கு வரவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளனர். இதனால், வாடிக்கையாளர்கள் சிரமத்துக்குள்ளாகினர்.

சந்தையில் சீனி தட்டுப்பாடு மட்டுமின்றி சம்பா, கீரி சம்பா அரிசிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இன்று சந்தைக்கு அரிசி வாங்க வந்த பல வாடிக்கையாளர்கள் அரிசி இல்லாமல் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டது.

எவ்வாறாயினும், நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலைக்கு அப்பால் சீனி மற்றும் அரிசி விற்பனை செய்பவர்களை கண்டறியும் சோதனைகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

# பிக்குவால் குத்தப்பட்ட...

அப்போது ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து மறைத்து வைத்திருந்த கத்தியால் பொலிஸ் உத்தியோகத்தரை குத்தியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்

காயமடைந்த 37 வயதுடைய கான்ஸ்டபிள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை (19) உயிரிழந்துள்ளதாக தெனியாய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளம் பிக்கு, மொரவக நீதவான் நீதிமன்றத்தில் வெள்ளிக்கிழமை (17) ஆஜர்படுத்தப்பட்டார். அவரை, எதிர்வரும் 29ஆம் திகதி வரையிலும் விளக்கமறியில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# “பூகோள அரசியல்...

மேலும் தற்பொழுது சீனாவைச் சேர்ந்த ஒருவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளமை தொடர்பாகவும் அமைச்சர் டக்ளஸிடம் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

அதற்குப் பதிலளித்து மேலும் கூறியதாவது, இராஜதந்திர நடவடிக்கை தொடர்பாக இந்திய தூதுவர், ஜப்பானிய தூதுவர், அவுதிரேலியா தூதுவர், சீன தூதுவர் உள்ளிட்டோர் வருவார்கள். கடற்றொழிலில் கூடுதலான அக்கறையைத் தூதுவர்கள் காட்டுகின்றார்கள். குறிப்பாக சீனா மாத்திரம் அல்ல எங்களுக்கு யாரிடமிருந்து உதவி கிடைத்தாலும் நாங்கள் எங்கள் நாட்டின் நலன் மக்களின் நலன் பற்றியே பார்த்துக்கொள்கின்றோம். பூகோள அரசியல் குழப்பங்களுக்கு ஒருபோதும் நாங்கள் இடமளிக்கப் போவதில்லை என்றார்.

குறித்த கலந்துரையாடலில் நக்டா நிறுவனத்தின் பிரதிநிதிகள் மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் துறை சார்ந்த பதவி நிலை உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டுள்ளனர்.

# சீன ஜனாதிபதியின்...

இதேவேளை கொழும்பு துறைமுக நகரத் திட்டம், ஹம்பாந்தோட்டையில் உத்தேசிக்கப்பட்டுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் உட்பட பல்வேறு சீன முதலீட்டுத் திட்டங்கள் தொடர்பில் அரச தரப்பினருடன் கலந்துரையாடவுள்ளது. அத்துடன் குறித்த குழு கண்டி தலதா மாளிகை உள்ளிட்ட பல இடங்களுக்கும் விஜயம் செய்யத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாலைதீவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மொஹமட் முய்சுவின் பதவியேற்பு நிகழ்வில், பங்குபற்றிய பின்னர் சீன ஜனாதிபதியின் விசேட குழு இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் நாட்டுக்கு சனிக்கிழமை (18) வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சைலன்சரை அகற்றி...

காத்தான்குடி பள்ளிவாயல்கள் சம்மேளனத் தலைவர் றஊப் ஏ மஜீத் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.என்.காரியவசம் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எஸ்.எம். றஹீம், மோட்டார் போக்குவரத்து பொறுப்பதிகாரி சந்தன மற்றும் சம்மேளன செயலாளர் ஏ.எல்.எம்.சபீல் நழீமி நிர்வாக சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது காத்தான்குடியின் போக்குவரத்து முறைகளை ஒழுங்குபடுத்துவதன் அவசியம் பற்றியும் இளைஞர்களது செயற்பாடுகள் பற்றியும் மிக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதனடிப்படையில், மோட்டார் வாகனங்களில் சைலன்சர் குழாய்களை அகற்றி பெரும் சப்தத்துடன் பயணிப்பவர்களினை பொது மக்களின் உதவியுடன் கைது செய்வதெனவும், அவ்வாறு சைலன்சர்களை அகற்றும் மோட்டார் வாகன திருத்துமிடங்கள் இனம் காணப்பட்டு உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், கடற்கரை மற்றும் கடற்கரை பிரதான வீதி ஆகியவற்றில் போக்குவரத்து நடைமுறைகளை கண்டிப்பாக அமுல்படுத்துவதெனவும், தலைக்கவசம் அணியாமல் பயணிப்பவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதெனவும், இரவு (நள்ளிரவு) நேரங்களில் அநாவசியமாக வீதிகளில் உலாவுகின்ற இளைஞர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதென்றும், திருமண வைபவங்களின் போது பொதுப் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக சப்தத்துடன் ஹோரன் எழுப்புபவர்களினையும் கைது செய்வதெனவும், போதைப் பொருள் பாவனை மற்றும் விற்பனை தொடர்பாகத் தீவிர கண்காணிப்பினை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# “மின்சார...

2019ஆம் ஆட்சிக்கு வந்த அரசாங்கமும், கப்புட்டு அமைச்சரவையுமே இதற்குப் பொறுப்பு கூற வேண்டும் என்றே தீர்ப்பில் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணிகளின் உதவியைப் பெற்று வாதங்களை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தினையும் நீதியரசர்கள் வழங்கியிருந்தனர். வாத விவாதங்களை ஆராய்ந்தறிந்தே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றார்.

யுத்தத்தை வென்றவர்களே யுத்த வெற்றிக்குப் பின்னர் நாட்டை வங்குரோத்தாக்கினர். இவ்வாறானவர்கள் நாட்டின் பொறுப்புகளை வகிக்க முடியாது. பாராளுமன்றத்தில் சட்ட மூலம் கொண்டு வந்து இவர்களது பிராஜா உரிமையை இல்லாமலாக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஐக்கிய மக்கள் சக்தி உறுதியாக உள்ளது. தற்போது முடியாவிட்டாலும் எமக்கு ஆட்சி அதிகாரம் கிடைத்தவுடன் நாம் இதை நிறைவேற்றுவோம் என்றார்.

அரசியல் தீர்மான எடுப்புகளில் இவர்களின் பங்கேற்பை இல்லாமலாக்க வேண்டும்.கப்புட்டு அமைச்சரவையின் தான்தோன்றித்தனமான எதேச்சதிகார ஆட்சி நிர்வாக போக்கே இதற்குக் காரணமாகும். இவர்களின் சலுகைகள் வரப்பிரசாதங்கள், ஓய்வூதியங்கள் முற்றாக இல்லாதொழிக்க வேண்டும் என்றார்.

யார் வேண்டுமானாலும் குடும்பம் சகிதம் பிறந்த நாள் கொண்டாட்டங்களை நடத்தலாம். அது சாதாரண விடயம் என்றாலும், உயர்நீதிமன்ற தீர்ப்பில் தெளிவாக பொறுப்புக்கூற வேண்டியர் என பெயர் குறிப்பிட்ட நபரின் பிறந்த தின கொண்டாட்டத்தில் ஜனாதிபதி பங்கேற்பது மக்கள் ஆட்சி சார்ந்த நீதியான ஆட்சி நிர்வாகம் சார்ந்த பலத்த சந்தேகங்களை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

# ஆராய்கிறது...

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு, தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி வருமானத்தின் அடிப்படையிலும், வாழ்க்கை செலவுப் புள்ளியின் அடிப்படையிலும் வழங்கப்பட வேண்டுமென்பதில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுதியாக இருப்பதாக அவர் இதன்போது குறிப்பிட்டார்.

மேலும் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதன உயர்வு விடயத்தில், பெருந்தோட்ட தொழில் அமைச்சு எவ்வித ஒத்துழைப்பையும் வழங்கவில்லையென இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு விடயத்தில் தொழில் அமைச்சு அலட்சியப் போக்கைக் காட்டி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனவே, எதிர்வரும் காலத்தில், நேரடியாக பெருந்தோட்ட முதலாளிமார் நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் செந்தில் தொண்டமான் குறிப்பிட்டார்.

இதன்போது, முதலாளிமார் சம்மேளனம், இணக்கம் ஒன்றுக்கு வர மறுத்தால், காங்கிரஸ் தமது தொழிற்சங்க போராட்டங்கள் மூலம், பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு உரிய வேதனத்தைப் பெற்றுக்கொடுக்கும் என்றும் அவர் செய்தியாளர் சந்திப்பின் போது தெரிவித்துள்ளார்.

# களனிதிஸ்ஸவுக்கு...

மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாவது மின் பிறப்பாக்கியில் ஏற்பட்ட திடீர் கோளாறு காரணமாக, மின் உற்பத்தியை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதனால் தேசிய மின் கட்டமைப்பிற்கு 300 மெகாவோட் மின் இழப்பு ஏற்பட்டுள்ளது. நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் மூன்றாவது மின் உற்பத்தி இயந்திரமும் தற்போது செயலிழந்து காணப்படுகின்றது.

பராமரிப்பு காரணங்களுக்காக மூன்றாவது மின் உற்பத்தி இயந்திரம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் தேசிய மின் கட்டமைப்பிற்கு 300 மெகாவாட் மின் இழப்பு ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், மின் விநியோகத்தில் எவ்வித இடையூறும் ஏற்படாது என மின்சார சபை உறுதிப்படுத்தியுள்ளது. தொடர்ந்து நீர் மின் உற்பத்தி இடம்பெறுவதுடன், மின் விநியோகம் இடம்பெற்று வருவதாகவும் மின்சார சபை அறிவித்துள்ளது. நீர் மின் நிலையங்களுடன் தொடர்புடைய நீர் நிலைகளின் நீர் கொள்ளளவு 88 சதவீதமாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# “நல்லாட்சி காலத்தில் ஜே.வி.பி ரணிலுடன் இணைந்து பணியாற்றியது”

பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானவர்கள் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிர்க்கட்சிகள் தவறான விளக்கங்களை வழங்குவதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வலியுறுத்தியுள்ளார்.

பொருளாதார வீழ்ச்சிக்கு உச்ச நீதிமன்றத்தினால் பெயரிடப்பட்ட குழுவே காரணம் என எவராலும் கூற முடியாது என சுட்டிக்காட்டிய அமைச்சர், முன்வைக்கப்பட்ட உண்மைகளின் அடிப்படையிலேயே நீதிமன்றம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டார். இந்த பொருளாதார நெருக்கடிக்கான காரணத்தைப் பாராளுமன்ற தெரிவுக்குழுவினால் மட்டுமே உரிய முறையில் ஆராய முடியும் என்று கூறிய அமைச்சர், இதற்காக புதிய தெரிவுக்குழுவொன்றை நியமிக்க வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தில் சனிக்கிழமை (18) இடம்பெற்ற வரவு -செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது:

விடுதலைப் புலிகளின் யுத்தம் மற்றும் ஜே.வி.பி பயங்கரவாதத்தினால் எமது நாட்டில் இழந்த பொருளாதார மதிப்பு 200 பில்லியன் டொலர்கள் என இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் சிவசங்கர் வேணன் தெரிவித்துள்ளார். அதாவது 200 பில்லியன் டொலர் மதிப்புள்ள முதலீட்டு வாய்ப்புகளை இழந்துள்ளோம். அப்போது 600 பில்லியன் டொலர்களை இழந்துள்ளோம். இது நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டதா? இல்லை. நீதிமன்றத் தீர்ப்பைத் தவறாகப் புரிந்து கொள்வதை விட, பொருளாதார வீழ்ச்சிக்கான காரணங்களை நல்லெண்ணத்துடன் ஆராய ஒரு தேர்வுக் குழு நியமிக்கப்பட்டால் நல்லது. தற்போது ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த இக்கட்டான நேரத்தில் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும் ஒன்றிணையுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்தார். ஆனால் அந்தப் பொறுப்பை ஏற்க யாரும் முன்வரவில்லை. அரகலவிற்குப் பிறகு, அரசியல்வாதிகளுக்கு ஒரு சவாலாக இருந்தது. மஹிந்த ராஜபக்ஷவும் அமைச்சரவையும் ராஜினாமா செய்தனர். நாட்டைக் பொறுப்பேற்கச் சொன்னார்கள் ஆனால் அப்போது நாட்டைப் பொறுப்பேற்க யாரும் இல்லை. இன்று தூக்கத்தில் இருந்து எழுந்தது போல் அழகான கதைகளை சொல்கின்றனர். பல தீக்குழிகளுக்கு நடுவில் நாடு இருந்ததை இன்று அனைவரும் மறந்துவிட்டனர்.

அந்த பாரிய பொறுப்பை ரணில் விக்ரமசிங்க ஏற்றுக்கொண்டார். அதற்காக அவருக்கே அது வழங்கப்பட்டது. அதனால்தான் இன்று எம்மால் இப்படி சரியாகப் பேச முடிகிறது. அவர் பாராளுமன்றத்தில் இல்லை. தேசியப் பட்டியலில் இருந்ததே வந்தார். இப்படி விமர்சிப்பது நல்லதல்ல. 69 இலட்சம் மக்கள் வாக்களித்து பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை பெற்றிருந்தும் எம்மால் அதனை செய்ய முடியவில்லை. நாங்கள் அதை ஏற்றுக்கொள்கிறோம். துரதிர்ஷ்டவசமாக, இதுபோன்ற சம்பவங்களை நாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இவ்வாறானதொரு நிலையில், அரசியலை விட நாட்டை முன்னிறுத்தி ரணில் அவர்களுக்கு உதவினோம். நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது அவரை விமர்சித்தோம். எதிர்க்கட்சித் தலைவர் உட்பட இந்த எம்.பி.க்கள் அனைவரும் ரணில் விக்ரமசிங்கவுடன் இருந்தனர். எங்களை விட எதிர்க்கட்சிகளுக்கு அதிக பொறுப்பு உள்ளது.



# கிழக்கு மாகாண வரலாற்றில் வெற்றி

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் அம்பாறை மாவட்ட கோனோகொல்ல கிராமத்திற்கு விஜயம் செய்த பொழுது அப்பகுதி மக்கள் வைத்தியசாலை நிர்மாணித்துத் தருமாறு கோரிக்கை முன்வைத்ததுடன், அப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்கவால் வேண்டுகோளும் விடுக்கப்பட்டது.

அந்த வேண்டுகோளுக்கு இணங்க 34 மில்லியன் ரூபாய் பெறுமதியில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள கோனோகொல்ல கிராமத்தில் வைத்தியசாலை நிர்மாணிப்பதற்காகக் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் அடிக்கல் நாட்டப்பட்டது.

# இறக்குவானை–கொழும்பு பஸ்கள் திட்டமிட்டு குறைக்கப்பட்டதா?

இறக்குவானையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணிக்கும் இலங்கை போக்குவரத்து சபையின் கொடக்கவெல டிப்போவிற்கு சொந்தமான பஸ்கள் திட்டமிட்டு குறைக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தலையீட்டிலேயே இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்கள் குறைக்கப்பட்டு வருவதாக பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

இறக்குவானையிலிருந்து கொழும்பிற்கு அதிகாலை 4.15 மற்றும் காலை 7 மணிக்கு பல தசாப்தங்களாக இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்கள் இயங்கி வந்தன.

ஆனால், அதிகாலை 4.15க்கு சேவையில் ஈடுபடும் பஸ் கடந்த ஒரு சில மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்மையினால், பயணிகள் நாளாந்தம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்துடன், இறக்குவானையிலிருந்து கொழும்பிற்கு காலை 7 மணிக்கு சேவையில் ஈடுபடும் பஸ் சேவையும் அவ்வப்போது நிறுத்தப்படுவதாக பயணிகள் கூறுகின்றனர்.

இறக்குவானையிலிருந்து கொழும்பிற்கு இதற்கு முன்னர் காலை 8.45ற்கு இயங்கிய இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் நிறுத்தப்பட்டதுடன், அந்த பஸ் சேவை மீள ஆரம்பிக்கப்படவில்லை.

அத்துடன், இறக்குவானையிலிருந்து பதுளை மற்றும் ஹட்டன் பகுதிகளுக்கு இயங்கிய இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களும் நிறுத்தப்பட்டதுடன், அந்த பஸ் சேவைகளும் மீள ஆரம்பிக்கப்படவில்லை.

மேலும், இறக்குவானையிலிருந்து கொழும்பிற்கு இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று பிற்பகல் 2.15ற்கு சேவையில் ஈடுபடுகின்றது.

எனினும், இந்த பஸ் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்படுகின்றது.

கொடக்கவெல பஸ் டிப்போவின் பதில்,

இறக்குவானையிலிருந்து கொழும்பிற்கு அதிகாலை 4.15 மற்றும் பிற்பகல் 2.15க்கு சேவையில் ஈடுபட்ட பஸ்கள் இயந்திர கோளாறு காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்த பஸ் சேவைகள் அடுத்த வாரம் முதல் வழமை போன்று இயங்கும் எனவும் அவர் உறுதியளித்தார்.

# மயிரிழையில் தப்பிய பயணிகள்

எஸ்.றொசேரியன் லெம்பேட்

யாழ்ப்பாணம்-மன்னார் பாதையூடாக பயணித்த தனியார் பேருந்து ஒன்று போட்டிப் போட்டு மற்றைய தனியார் பேருந்தை முந்த முயன்றவேளை, நிலைதடுமாறி அருகில் இருந்த மரத்தில் மோதவிருந்த நிலையில், நூற்றுக்கணக்கான பயணிகள் மயிரிழையில் உயிர் தப்பியுள்ள சம்பவம் சனிக்கிழமை (18) யாழ். முழங்காவில் பிரதான வீதியில் இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து மதியம் 3 மணியளவில் புறப்பட்ட தனியார் பேருந்து, பயணிகளை ஏற்றிக்கொண்டு முழங்காவில் முக்கொம்பன் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த நிலையில், பின்னால் வந்த மற்றைய தனியார் பேருந்து சாரதியின் செயற்பாட்டால் நிலை தடுமாறி உள்ளது.

இதன் காரணமாக நிலை தடுமாறிய பயணிகளுடன் மன்னார் நோக்கி வந்த தனியார் பேருந்து அருகில் உள்ள மரத்தில் மோதும் விதமாகச் சென்ற நிலையில் மரத்தைச் சூழ இருந்த மணல் திட்டு காரணமாக விபத்து தவிர்க்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பயணிகள் பேருந்தில் இருந்து இறக்கப்பட்டு வேறு பேருந்தில் அனுப்பி வைக்கப்பட்டதுடன், பேருந்தில் பொலிஸார் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளனர்.





## சூரன்போர்

முருகப்பெருமானை வேண்டி அனுஷ்டிக்கப்படும் விரதங்களில் மிகவும் முக்கியமான விரதம் கந்த சஷ்டி விரதமாகும். இந்த விரதம் ஆறு நாட்களாக அனுஷ்டிக்கப்பட்டு இறுதி நிகழ்வான சூரசம்கார நிகழ்வு சனிக்கிழமை (18) அன்று முருகன் ஆலயங்களில் சிறப்பாக நடைபெற்றுள்ளது.



## போதைப்பொருள் வியாபாரி கைது

ரஸீன் ரஸ்மின



தனது குடும்பத்துடன் சுற்றுலா சென்று இலங்கை திரும்பிய போதைப்பொருள் வியாபாரி ஒருவர் ஞாயிற்றுக்கிழமை (19) கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு - பொரளை பிரதேசத்தில் வசிக்கும் 44 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், திருகோணமலை பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு போதைப்பொருள் வழங்கியவர் என தெரியவந்துள்ளது.

சந்தேக நபர், தனது குடும்ப உறுப்பினர்களுடன் தாய்லாந்துக்கு சுற்றுலா பயணத்தை முடித்துக் கொண்டு பேங்கொக்கில் இருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமான UL-405 இல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தபோது பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் தலைமையகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## யானை தாக்கி ஒருவர் உயிரிழப்பு



ரஸீன் ரஸ்மின்

கருவலகஸ்வெவ - தேவநுவர கிராமத்தில் காட்டு யானையின் தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் வெள்ளிக்கிழமை (17) இரவு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கருவலகஸ்வெவ - தேவநுவர பகுதியைச் சேர்ந்த 78 வயதுடைய டபிள்யூ.நிக்கோலஸ் பெரேரா எனும் மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் வீட்டை விட்டு வெளியே சென்றபோது, காட்டு யானையின் தாக்குதலில் உயிரிழந்துள்ளதாகவும், அதன் பின்னர் உறவினர்கள் அவரின் சடலத்தை வீட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் கருவலகஸ்வெவ பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து, உயிரிழந்த நபரின் வீட்டுக்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அத்துடன், சம்பவ இடத்திற்கு வருகை தந்த திடீர் மரண விசாரணையின் அதிகாரி, மரண விசாரணையை மேற்கொண்ட பின்னர் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கருவலகஸ்வெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நானுஓயாவில் மண்சரிவு

செ.திவாகரன், டி.சந்ரு

நுவரெலியா - ஹட்டன் பிரதான வீதியில் நானுஓயா பங்களாஹாத்த பகுதியில் சனிக்கிழமை (18) ஏற்பட்ட மண்சரிவால் அந்த வீதியூடாக ஒருவழிப் போக்குவரத்து இடம்பெற்று வருகின்றது.

குறித்த மண்சரிவு காரணமாக நுவரெலியா, தலவாக்கலை, ஹட்டன் மற்றும் மெராயா வழியூடாக டயகமவுக்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, நானுஓயா பொலிஸார், நுவரெலியா வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து மண்மேட்டை அகற்றி குறித்த வீதியின் போக்குவரத்தை வழமைக்குக் கொண்டு வருவதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

மத்திய மாகாணத்தில் தொடர்ந்து பெய்து வரும் அடைமழை காரணமாக நுவரெலியா - ஹட்டன் பிரதான வீதியில் பல இடங்களில் மண்சரிவு ஏற்படும் அபாயகரமான வெடிப்புகள் ஏற்பட்டுள்ளது.

எனவே, இவ்வீதியில் பயணிக்கும் வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் விழிப்பாகவே இருக்க வேண்டும் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.





## படுத்திருந்த மாட்டினால் ஓமந்தையில் விபத்து

பு.கஜிந்தன்

யாழ்ப்பாணத்தில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த கொள்கலன் வாகனம் ஒன்று இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்தில் போதி விபத்துக்குள்ளான சம்பவமொன்று ஞாயிற்றுக்கிழமை (19) அதிகாலை பதிவாகியுள்ளது.

ஓமந்தை வீதியில் படுத்திருந்த மாட்டினை கடப்பதற்கு முற்பட்ட வேளையில் பின்னால் வந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து, கொள்கலன் வாகனத்தை மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் வாகனத்தில் பயணித்த இருவரும் காயங்களுடன் தப்பியுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## முதியவர் அடித்து கொலை; ஒருவர் கைது

பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் - உரும்பிராய் தெற்கு பகுதியில் சனிக்கிழமை (18) இரவு முதியவர் ஒருவர் அடித்து கொலை செய்யப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தன்று தாக்குதலுக்கு இலக்கான முதியவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

உணவகம் ஒன்றில் பணியாற்றும் உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் பிறேமராசன் என்ற 66 வயதான முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறிப்பிட்ட உணவகத்தில் ஏற்பட்ட முரண்பாடே கொலைக்கான காரணம் என தெரியவந்துள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பில் அப்பகுதியைச் சேர்ந்த வாய் பேச இயலாத 44 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலை சம்பவம் தொடர்பாக யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஆனந்தராஜா உணவகத்திற்குச் சென்று பார்வையிட்டுள்ளார்.

## வட்டுக்கோட்டையில் ஆணின் சடலம் மீட்பு; பொலிஸார் மீது சந்தேகம்

பு.கஜிந்தன்

யாழ். வட்டுக்கோட்டை - பொன்னாலை சந்தியில் அண்மையிலுள்ள புதர் ஒன்றிலிருந்து உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் சனிக்கிழமை (18) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் ஆனைக்கோட்டை - ஆறுகால்மடம் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி சேகரன் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவர் கடந்த 14ஆம் திகதி பொன்னாலை கிராம சேவகர் அலுவலகத்தை சேதப்படுத்தும் விதத்தில் செயற்படுகின்றார் என ஊர் மக்கள் கிராம சேவகருக்கு தெரிவிததையடுத்து, கிராம சேவகர் இது குறித்து பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

பொலிஸார், அவரை அழைத்துச் சென்றதாகவும் கிராம சேவகருக்கு உறுதிப்படுத்தியுள்ளனர்.



இந்நிலையில், சனிக்கிழமை (18) ஊடகவியலாளர் ஒருவர் குறித்த பகுதிக்கு சென்று சடலத்தை புகைப்படம் மற்றும் காணொளி எடுத்தபோது, பொலிஸாரால் புகைப்படம் எடுக்க வேண்டாம் என மிரட்டும் தொனியில் தடுத்துள்ளனர்.

குறித்த ஊடகவியலாளர் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு, கடந்த 14ஆம் திகதி பொன்னாலை கிராம சேவகரின் அறிவித்தலின் பேரில் மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவரை பொலிஸ் நிலையம் அழைத்து சென்றீர்களா? அவ்வாறு அழைத்துச் சென்றால் அவர் எங்கே? என வினவியுள்ளார்.

அதற்கு "அது தொடர்பாக எதுவும் தெரியவில்லை" என பொலிஸார் பதிலளித்துள்ளனர்.

உயிரிழந்தவரை அழைத்துச் சென்றதாக கிராம சேவகருக்கு கூறிய பொலிஸார், அவரை பற்றி தெரியாது என ஊடகவியலாளருக்கு கூறியது மற்றும் புகைப்படம் மற்றும் காணொளி எடுக்க விடாமல் தடுத்தது போன்ற விடயங்கள் வட்டுக்கோட்டை பொலிஸார் மீது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரியவந்துள்ளது.



# தரமற்ற பொருட்களை உற்பத்தி செய்வதை தடுக்கவும்

உள்ளூர் சந்தைகளில், தரமற்ற, கலப்படமான பொருட்களை விற்பனைச் செய்து கூடிய இலாபத்தை ஈட்டிக்கொள்ளும் முயற்சியிலேயே வர்த்தகர்கள் பலரும் மும்முரமாக ஈடுபடுகின்றனர்.

இந்நிலையில், தரமற்ற தக்காளி சோஸ் தயாரித்தல் மற்றும் விற்பனை செய்தமை உள்ளிட்ட 40 குற்றச்சாட்டுகளில் குற்றத்தை ஒப்புக்கொண்ட தனியார் நிறுவனமொன்றின் பணிப்பாளர்கள் இருவர் உட்பட ஐந்து பிரதிவாதிகளுக்கு மாளிகாகந்த நீதிமன்றத்தில் 80,000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டமை யாவரும் அறிந்த விடயமாகும்.

இந்த தரக்குறைவான சோஸ் தயாரிக்க செயற்கை நிறங்கள் பயன்படுத்தப்பட்டு, குறிப்பிட்ட வணிக நாமத்தில் விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்பட்டது. தமக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் வாழைத்தோட்ட, புதுக்கடை மற்றும் மற்றும் கொச்சிக்கடை பொதுச் சுகாதார பரிசோதகரால் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. அந்த மாதிரிகள் தொடர்பான சுவையாளரின் அறிக்கைகள் கொழும்பு மாநகர சுவையியலாளர் ஆய்வகத்தில் இருந்து பெறப்பட்டுள்ளதாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

உணவுப் பொருட்களைச் சரியான தரம் இன்றியும், தரம் தாழ்ந்தும் விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றியதற்காக நீதிமன்றத்தில் தண்டனை பெற்ற முதல் நிறுவனம் இந்த நிறுவனம் அல்ல என்பதும், இந்தக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்படும் கடைசி நிறுவனமும் அல்ல.

உயிருக்குப் பெரும் ஆபத்தை விளைவிக்கும் வகையில் நடத்தப்பட்ட கடத்தல் குறித்த முறைப்பாட்டைக் குப்பையில் போடாமல், உரிய முறையில் சோதனை நடத்தி குற்றவாளிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

பொதுச் சுகாதாரத்திற்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய உணவுப் பொருட்கள் தொடர்பான தற்போதைய சட்டத்தை விட மிகக் கடுமையாகச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். பல நாடுகளில் இந்தச் சட்டங்கள் கடுமையாகச் செயல்படுத்தப்படுகின்றன. பெரும்பாலும், தவறு நிரூபிக்கப்பட்டால், தவறின் தன்மையைப் பொறுத்து, அவர்களின் தொழில்கள் கூட தடைசெய்யப்பட்ட நிகழ்வுகள் உள்ளன. ஆனால் நம் நாட்டில் நிலைமை வேறு. இனிப்புகள் உள்ளிட்ட பேக்கரி உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் முன்னணி நிறுவனத்தில் காலாவதியான பொருட்கள் சில காலத்திற்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டது.

ஊடகங்கள் மூலமாகவும் பெரிய அளவில் விளம்பரம் கிடைத்தது. அதற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன, ஆனால் அந்த நிறுவனத்திற்கு எதிராக நீண்ட கால நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சில நாட்களில், அதன் தயாரிப்புகள் மீண்டும் விற்பனை செய்யத் தொடங்கின.

இந்த சம்பவத்தை ஒடுக்க அரசியல் செல்வாக்கு இருப்பதாகவும் சிலர் கூறினர்.

பல வர்த்தகர்கள் கடும் சிரமங்களுக்கு மத்தியில் தமது தொழில்களை நடத்தி வருகின்றமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. அதிக உற்பத்திச் செலவு, குறைந்த விற்பனை, செலுத்த வேண்டிய அதிக வரி எனப் பல்வேறு காரணங்களால் அவர்கள் இந்தச் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்பது உண்மைதான். ஆனால் சந்தையில் தரக்குறைவான பொருட்களை விற்க இது ஒரு காரணம் அல்ல.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# தலையெடுக்கும் நவம்பர் எதிரொலிகள்

**லக்ஸ்மன்**

நவம்பர் மாதம் இலங்கைத் தமிழர்களது அரசியல் விடுதலைப் போராட்டத்தில் முக்கியமான மாதமாகவே பார்க்கப்படுகிறது. இந்த மாதம் ஆரம்பித்தாலே பாதுகாப்புத் தரப்பினரது அச்சுறுத்தல்களும் அடக்குமுறைகளும் தலையெடுத்துவிடும். அடக்குமுறைகள் மூலமாக எல்லாவற்றினையும் செய்துவிடலாம் என்ற எண்ணப்பாடே அதற்குக் காரணமாகும். ஆனாலும் நவம்பர் மாதம் முழு நாட்டுக்கும் முக்கியமானது. வரவு - செலவுத் திட்டம் அதன் காரணம்.

ஜே.வி.பி. எனப்படும் மக்கள் விடுதலை முன்னணியின் கார்த்திகை வீரர்கள் தினமும் இம்மாதத்திலேயே அனுஷ்டிக்கப்படுவது வழமை. ஆனால், இரண்டு மீதான பார்வை மற்றும் எதிர்வினைகளில்தான் வேறுபாடு. முழு நாட்டுக்கும் எதிராகப் போராடியவர்களது நினைவுகூரல் எவ்வித எதிர்ப்புமின்றி நடைபெற, தமது இனத்தினுடைய விடுதலைக்காகப் போராடிய தமிழ் மக்களுடைய போராட்டத்தின் நினைவுகளை மீட்க முடியாதளவுக்கு எதிர்வினைகளாற்றப்படுவது ஓரவஞ்சனையே.

சட்டமூலங்கள் இயற்றப்படுகின்றன. நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகின்றன. மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் நாட்டுக்கும் மக்களுக்கும் ஏதேனும் பயனைத் தந்துவிடுமா? அத்தகைய சட்டங்கள் மூலமாக வடக்கு கிழக்கிலுள்ள கடல் வளம் உள்ளிட்ட வளங்களை முழுமையாகத் தமிழர்கள் பயன்படுத்துவதற்குக் கூட முடியாத சூழலே உருவாக்கப்படுகிறது. அதே நேரத்தில், தமிழர்களுடைய விடயங்கள் பொறுப்பற்ற வகையில் கையாளப்படுவதாகவும் கரிசனைக்கு எடுத்துக் கொள்ளப்படாததாகவும் என இலங்கை அரசியலில் முற்றுமுழுதான வெறுப்புணர்வு சார்ந்ததான அரசியலே நடைபெற்று வருகிறது. அதனை மற்றொரு வகையில் சொன்னால், தமிழர்களது முதுகில் குத்தும் செயற்பாடுகளே வரலாற்றில் நடைபெற்றிருக்கின்றன.

தமிழர்களது சிந்தனை எதிர்மறையாக உள்ளது எனக் குற்றம் சாட்டப்படலாம். நாடு சுதந்திரம் அடையும் போது தமிழர்கள் தேவைப்பட்டார்கள். இந்தியா சுதந்திரமடைந்ததன் பின் இலங்கையின் சுதந்திரத்துக்காக சேர்.பொன்.இராமநாதன், சேர்.பொன்.அருணாசலம் போன்றோர் பிரித்தானியா சென்று நாட்டிற்கு சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்தார்கள். இது அனைவரும் அறிந்துகொள்ளவேண்டிய வரலாறு மட்டுமல்ல, அறிந்ததும் கூட. ஆனால், மறக்கப்பட்ட அல்லது மறைக்கப்படுவதாக மாறிப்போனது. இவ்வாறு நன்றி மறந்து, முதுகில் குத்தும் செயற்பாட்டுக்கு நிறையவே உதாரணங்கள் அடுக்கப்படலாம்.

> **இலங்கை அரசியலில் முற்றுமுழுதான வெறுப்புணர்வு சார்ந்ததான அரசியலே நடைபெற்று வருகிறது. அதனை மற்றொரு வகையில் சொன்னால், தமிழர்களது முதுகில் குத்தும் செயற்பாடுகளே வரலாற்றில் நடைபெற்றிருக்கின்றன**

மேலும், நாட்டின் விவசாயம், மீன்பிடி, சுற்றுலாத்துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளதும் வீழ்ச்சிக்கும், பொருளாதார நெருக்கடிகளுக்கும் காரணம் இந்த நாட்டில் ஏற்படுத்தப்பட்ட இனக் கலவரங்கள், இன முறுகல்களே. இருந்தாலும் இப்போதைய நிலையில், கடந்த வாரத்தில் நீதித்துறை வழங்கியிருக்கும் மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தினரின் பொருளாதாரக் குற்றம் அண்மைய ஒரு உதாரணமே தவிர முழுதானதல்ல.
நாடு சுந்திரமடைந்ததிலிருந்து தமிழர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டார்கள். 1956இல் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்து இந்த நாட்டைக் கலவர பூமியாக மாற்றியது சிங்கள அரச தலைவர்களாவர். 1957இல் பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் ஊடாக இந்த நாட்டில் தமிழர்கள் சம அந்தஸ்த்துடைய பிரஜைகள், அவர்கள் சம உரிமையுடன் வாழலாம் எனும் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டபோது ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் புத்த பிக்குகள் கண்டி யாத்திரை செய்து அதனை இல்லாமல் செய்தார்கள். அதே போன்றே, டட்லி செல்வா ஒப்பந்தம் என்றே வரலாறுள்ளது.

1958, 1978 மற்றும் 1983ஆம் ஆண்டுகளில் தமிழர்களை இன ரீதியாக அடக்கி, அவர்களது பொருளாதாரத்தை அழித்துப் பல ஆயிரக்கணக்கான உயிர்கள் பறிக்கப்பட்டு அவர்களை அகதிகளாக ஆக்கிய பெருமை பெரும்பான்மையினரையே சாரும். அதேபோன்ற திட்டமிடப்பட்ட அழிவுகளே 2009 வரையிலும் நடைபெற்றிருந்தன.

தமிழர்கள் எப்போதும் ஆயுதப் போராட்டத்தையோ, ஆயுதக் கலாசாரத்தையோ விரும்பியிருந்தவர்கள் அல்ல என்பதனை பல தடவைகளில் தமிழ்த் தலைவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அரசியல், ஜனநாயக ரீதியில் இந்த நாட்டில் தாங்களும் சம உரிமையுடன் வாழ வேண்டும் என்று அகிம்சை ரீதியான போராட்டங்கள் நடத்தப்பட்டன. ஒப்பந்தங்கள் ஊடாகத் தீர்வைக் காண முயன்றவர்களை பெரும்பான்மையினத் தலைவர்கள் ஏமாற்றி, அகிம்சை ரீதியாகப் போராடியவர்களின் தலைகள் உடைக்கப்பட்டன. அதனால் தமிழ் இளைஞர்கள் வலிந்து ஆயுதப் போராட்டத்திற்குள் தள்ளப்பட்டார்கள். இதுவே வரலாறு.

தமிழர்களின் போராட்ட அரசியல் வரலாறு பல இழப்புகளையும், அழிவுகளையும் இன்னல்களையும் கண்டது. இருந்தாலும் இன்னமும் தீர்வை அடைந்துவிடாமலேயே தொடர்கிறது என்பதுவே துயரமானது.
2009இல் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் வேறு ஒரு நிகழ்ச்சி நிரலின் கீழ் இந்த நாட்டை பௌத்த நாடு என்று சொல்ல முற்படுவதும், அடாவடியான அத்துமீறல்களுமே நடைபெற்று வருகின்றன. வடக்கு, கிழக்கில் அத்துமீறிய பௌத்த மயமாக்கல் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. தெற்கிலிருந்து வருபவர்கள் வடக்கு கிழக்கில் புதிது புதிதாக விகாரைகளை அமைக்கிறார்கள். தமிழர்களது சின்னங்கள் அழிக்கப்படுகின்றன. அல்லது அழிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நாட்டில் வடக்கு, கிழக்கு உட்பட தமிழ் பௌத்தம் இருந்தது என்பதனை இல்லாமல் செய்து அவையெல்லாம் சிங்கள பௌத்தத்துக்கானதாக மாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது எவ்வகையான குழப்பகரமான செயற்பாடு என்பதனை நாம் புரிந்து கொள்ளத்தான் வேண்டும்.

> **தற்போது இனவாத நடவடிக்கைகளை முன்னாள் கடற்படைத் தளபதி, பாராளுமன்ற உறுப்பினர்களான சரத் வீரசேகர, உதய கம்மன்பில போன்றவர்கள் முன்னெடுத்தார்கள்**

தமிழர்கள் இருந்ததற்கான எந்த அடையாளங்களும் நாட்டில் இருந்துவிடக்கூடாது என்பதற்காக பௌத்தம் இருந்ததற்கான அடையாளங்கள் புனையப்படுகின்றன. அல்லது நிரூபிக்கப்படுகின்றன. 2009இல் யுத்தம் மௌனிக்கப்பட்ட கையோடு, வடக்கு, கிழக்கில் இருந்த தமிழர்களின் இன விடுதலைக்கான போராட்டச் சின்னங்கள், மாவீரர் துயிலுமில்லங்கள் அழிக்கப்பட்டன. அதன் பின்னர் அவை இருந்ததற்கான அடையாளங்கள் மக்களால் மீட்கப்பட்டால், புதுப்பிக்கப்பட்டால், அல்லது மீளமைக்கப்பட்டால் மிக் கடுமையாகத் தடுக்கப்படுகிறது. இது தமிழர்கள் மீதுள்ள வெறுப்பினால் நடைபெறுகின்றதா அல்லது அவர்களை ஏற்காமையின் வெளிப்பாடா? என்பது புரியாப் புதிராகவே இருக்கின்றது.

ஒரு காலத்தில் கே.எம்.பி.இராஜரெட்ண, சிறில் மத்தியு போன்ற இனவாதிகள் தமிழர்களுக்கு எதிராக தங்களது இனவாத நடவடிக்கைகளை முன்னெடுத்தார்கள். இந்த நாடு பற்றி எரிந்தது. தற்போதைய நிலையில் முன்னாள் கடற்படைத் தளபதியும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்களான சரத் வீரசேகர, உதய கம்மன்பில போன்றவர்கள் அதனை முன்னெடுக்கிறார்கள். இவர்களுக்கு முன்னர் இன்னும் பலரும் முன்கொண்டிருந்ததையே அவர்கள் மேற்கொள்கிறார்கள் என்பது இதன் உண்மை. அது இந்த நாட்டில் மீண்டுமொரு இனக்கலவரத்தை உருவாக்கி மீண்டும் மீண்டும் இந்த நாட்டை அதளபாதாளத்திற்குள் தள்ளும் வரலாற்றுத் தவறைச் செய்வதற்கே முயற்சிக்கின்றார்கள்.

வடக்கு, கிழக்கில் தமிழ் பௌத்தர்களே இருந்தார்கள் என்று பௌத்த பிக்குகள் சிலரே கூறினால் கூட அதனை ஏற்கும் மனோநிலை தெற்கிலுள்ளவர்களுக்கில்லை. அத்துடன், போராட்ட காலத்தில் வடக்கு கிழக்கில் விகாரைகள் எதுவும் தாக்கப்படவில்லை. யாழ்ப்பாணத்தில் நாக விகாரை இருந்தது. இன்னும் பல விகாரைகள் இருந்தன. எந்த விகாரைகளும் தாக்கப்படவில்லை. ஆனால் அக்காலத்தில் இராணுவத்தினராலும், பாதுகாப்புப் படையினராலும் இந்து ஆலயங்கள் பல தாக்கப்பட்டன, கிறிஸ்தவ தேவாலயங்கள் அழிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான மக்கள் அந்த ஆலயங்களிலே கொல்லப்பட்டார்கள் என்று புத்த பிக்குகளே கூறியிருக்கிறார்கள். இருப்பினும் இனவாத மனோநிலை கொண்டவர்களின் வெளிப்பாடு வேறு வகையிலிருப்பது ஒரு விநோதமே.

இதன் தொடர்ச்சியாகத்தான் மீண்டும் இம்மாதத்தில் நடைபெறவுள்ள நினைவுகூரல்களுக்கெதிரான நீதிமன்றத் தடையுத்தரவுகள் கோருகின்ற முயற்சிகள் பொலிஸாரால் சமர்ப்பிக்கப்பட்ட வண்ணமிருக்கின்றன. வழமை போலவே சில நீதிமன்றங்களில் அனுமதி கிடைக்கலாம். சில நீதிமன்றங்களில் பொலிஸாரால் கோரப்படும் கோரிக்கைகள் மறுக்கவும் படலாம். ஆனாலும், மாவீரர் நினைவுகூரல்கள் நடைபெறும் என்றே நம்புவோம். பிரச்சினைகளும் ஏற்படலாம். அதன்பின்னர் பலருக்கு எதிராக வழக்குகளும் தொடரப்படலாம்.

இவ்வாறிருக்கத் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற தீர்வு எவ்வாறு வழங்கப்படும். அதற்காக நடத்தப்படுகின்ற போராட்டங்கள், நாடு முதல் சர்வதேசம் வரை எடுக்கப்படுகின்ற முயற்சிகள் பலன்கொடுக்குமா என்பது பதில் கிடைக்காத சலிப்புத்தட்டிய கேள்வியாகவே இருக்கிறது. இந்தக் கேள்விக்குப் பதில் கிடைக்கும் வரை எதிரொலிகள் இருக்கத்தான் செய்யும். தமிழர் தரப்பின் முயற்சிகளும் தொடர்ந்தவண்ணமே தான் இருக்கும்.



## வாழ்வியல் தரிசனம்

சுய நலமில்லாமல் வாழ்பவர்களைப் பலர் சுரண்ட நினைக்கின்றார்கள். உறவுகளை, உதவுபவர்களை எளிதாக ஏமாற்றுபவர்கள், தங்களை தாங்களே சிறுமைப்படுத்துகின்றனர்.

இத்தனை நடந்த பின்னரும் கூட, தாராளமனம் படைத்தோர் தங்களது நல்ல செயல்களை நிறுத்துவதும் இல்லை. இந்த உலகில் எல்லாமே நடக்கும். பெற்றோரை மதிக்காத பிள்ளைகள், ஆசானை மறந்த மாணவர்கள், கொடுத்தவர்களுக்கே துரோகம் செய்யும் எத்தர்கள் என ஏராளமான பிரகிருதிகள் எம்மோடு வாழ்ந்தபடியே நடமாடுகின்றனர்.

சந்தோஷமாகக் கோவில் திருவிழாவை மக்கள் கொண்டாடும் போது, அங்கேயும் திருடர் கூட்டம் தங்கள் கைரிசையைக் காட்டுகின்றனர். எப்படி எச்சரிக்கை செய்தாலும் மக்கள் அதனைக் கேட்காமல் பணம், பொருள்களைத் துஷ்டர்களிடம் இழக்கின்றார்கள்.

நல்வாழ்வு கெட்டவர்களுக்குப் பிடிக்காது. குற்றச்செயல்களை தங்களின் நிரந்தர தொழிலாகக் கொண்டவர்கள், திருந்துவது இல்லை. முற்காலத்தில் அரசர்கள், திருடர்களை எத்தர்களை மன்னிப்பதில்லை. பெரும் தண்டனை வழங்குவார்கள். உலக அமைதி தீயோர்களை களைவதில் தங்கியுள்ளது.

நன்றி -பருத்தியூர் பால- வைரவநாதன்

## கடிதங்கள்

### மரத்தை வெற்றி அகற்றுமாறு கோரிக்கை

ஹட்டன்- பொகவந்தலாவ பிரதான வீதியில் பொகவந்தலாவ டின்சின் நகருக்கு அருகில் முறிந்து விழும் அபாயத்தில் உள்ள சீமைக்கருவேல மரத்தை அகற்றுமாறு பிரதேச மக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

டின்சின் நகரில் பெய்த கனமழை மற்றும் பலத்த காற்றின் காரணமாக, டின்சின் நகரின் பிரதான வீதியின் ஓரத்தில் உள்ள உயர் மின்கம்பிகள் மற்றும் தொலைபேசி கம்பிகளுக்கு மிக அருகில் இருந்த 100 அடி உயரமுள்ள சீமைக்கருவேல மரத்தின் பல கிளைகள் விழுந்தன. குறித்த மரம் வீதியில் விழும் அபாயம் உள்ளதால், அந்த மரத்தை வெட்டி அகற்ற வேண்டும் என, அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வீதியில் தினமும் ஏராளமான பேருந்துகள் மற்றும் வாகனங்கள் சென்று வருவதால், அந்த வாகன ஓட்டுநர்களும் அவ்விடத்தைக் கடந்து செல்ல அச்சப்படுகின்றனர் என்வும் சுட்டிக்காட்டியுள்ளனர்.


ரஞ்சித் ராஜபக்ஷ



# அறிவாராய்ச்சியியல் Epistemology



முகமது நிஜாம் ஆஃப்ரீன்
தத்துவவியல் துறை
பேராதனை
பல்கலைக்கழகம்
(நான்காம் வருடம்)



அறிவாராய்ச்சியியல் என்றால் என்ன? என்பதை இக் கட்டுரையின் ஊடாக விளக்க முன்வந்திருக்கும் நான் பிரதானமாக அறிவாராய்ச்சியியல் காணப்படுகின்ற இயல்புகளை மெய்யியல் ரீதியாக விளக்க முற்படுகின்றேன். அந்த வகையில் அறிவாராய்ச்சியியல் என்ற பதமானது ஆங்கிலத்தில் Epistemology என அழைக்கப்படும். இதனுடைய பொருளானது Theory of knowledge என கருதப்படுகிறது. இது மெய்யியலின் ஓர் பகுதியாகவும் காணப்படுகிறது. ஏனெனில் மெய்யியல் என்பது அறிவினை தேடுகின்ற உண்மையை கண்டுபிடிக்கின்ற ஓர் பரப்பாக இருப்பதால்அறிவாராச்சியியல் உள்ள விடயங்களை மெய்யியல் தேடுகின்றது. அதாவது அறிவின் இயல்புகள் யாவை? அறிவின் மூலாதாரம் என்ன? அறிவு பூரணமானதா? அறிவை நாம் எவ்வாறு பெறுகின்றோம்? அறிவுக்கும் நம்பிக்கைக்கும் இடையில் உள்ள தொடர்பு என்ன?அறிவு எதனைச் சார்ந்துள்ளது? போன்ற பல்வேறு இயல்புகளை மெய்யியல் ஆய்வு செய்கின்றது. நாம் எல்லோரும் பெறுகின்ற அறிவு நமக்குள்ளேயே சரியானது என்று நம்புகின்றோம். ஏற்கின்றோம். இவ்வாறு நமக்குள் நம்பப்படும் அறிவு எவ்வளவு தூரம் பொதுவான உலக பொதுமையான அறிவாகக் காணப்படும் என்பதை மெய்யியல் அறிவு செய்கிறது. எல்லா துறைகளுமே அறிவியலைப் பெறுவதை நோக்காகக் கொண்டுள்ளது. இந்த அறிவுத்துறைகள் தம்முடைய அறிவு சரியானது என ஏற்றுக்கொள்வதற்கும் தர்க்கரீதியாக நிறுவுவதற்கும் வேண்டிய சில முறைகளை உருவாக்குகின்றன.

இதன் அடிப்படையில் பெறப்படுகின்ற அறிவுகள் சரியானதாக இருக்கின்றதா? தவறுகள் ஏதும் இருந்தால் அல்லது சிக்கல் தன்மைகள் எழுமிடத்து எப்படித் தீர்த்துக் கொள்ளலாம் என்பதன் அடிப்படையில் மெய்யியல் ஆய்வு செய்கின்றது. பொது விஞ்ஞான அறிவினை எல்லோரும் ஒழுங்குபடுத்தப்பட்ட அறிவு எனவும் திருத்தமான அறிவு எனவும் நம்புகின்றோம். அவ்வாறு காணப்படின் அவ்வாறு கிடைக்கின்ற விஞ்ஞான அறிவு அனுபவ சோதனையை மையமாகக் கொண்டு பெறப்படுகின்ற போது எவ்வாறான இடர்பாடுகளைப் பெறுகின்றது. அதனை எவ்வாறு நீக்குவது,அதில் ஏற்படும் போலி தன்மைகளை எவ்வாறு களைவது போன்ற பல்வேறான தன்மையில் அறிவாராச்சியியல் என்பதனை மையமாகக் கொண்டு மெய்யியல் தனது பணியை மேற்கொள்கிறது. மனிதன் அறியும் பிராணியாக இருப்பதனால் அவனுக்குத் தகுதியுண்டா இப்பிரச்சினைகளை இனங்காண்பதற்குப் போன்ற சிந்தனையை மெய்யியலாளர்கள் ஆரம்பக் காலத்தில் கொடுத்த விளக்கங்கள் ஒன்றில் ஐயவாதம் சார்வு வாதம் சார்ந்த தொன்றாக இருந்தன. சோக்கிரட்டிஸ் மனிதன் ஆறறிவுள்ளவர். அவனிடம் பகுத்தறிவு உண்டு. அவனுடைய பகுத்தறிவு தன்மையின் மூலம் பிராணிகளைக் காட்டிலும் தான் பெறும் அறிவு சரியானதாக உள்ளது என நம்புகிறான். இதன் அடிப்படையில் மனிதனால் சரியான அறிவினை பெறக்கூடியதாக இருக்கும் எனவும் இவர் குறிப்பிட்டிருந்தாலும் நடைமுறை அறிவினை சார்ந்த கருத்துக்கள் முழுமையான உண்மை என்று கூற வாய்ப்பில்லை.

இதனால் மனிதன் ஏற்புடைய அறிவினை பெறமுடியாது என்றும் அறிவு என்பது போலி எனவும் ஐயவாதம் வாதிடுகின்றது. சார்வு வாதம் பொருட்களுக்கு இடையிலான தொடர்பு குறித்து அறிவினைப் பெறமுடியும் என்பதே வேறு முறையில் பெற முடிவதில்லை என்பதனை வலியுறுத்துகின்றது. தீவிர ஐயவாதத்தின் தன்மையில் மனிதர் எல்லா வகையான அறிவுகளையும் பெறமுடியாது எனவும் அவற்றில் சிலவற்றை மட்டுமே அறிந்து கொள்ள முடியும் என கூறுகின்ற தன்மையும் முக்கியப்படுத்தப்படுகின்றது எனலாம். சமயத்தில் காணப்படுகின்ற கருத்துக்களை ஐயப்பட முடியாது எனவும் இறைவழிபாடு, விசுவாசம் என்ற தலைப்பின் அடிப்படையில் தஞ்சம் புகுந்து கொண்டு ஐயுற முடியாத அறிவு உண்டு எனக் கூறப்படுகின்ற தன்மையினை நாம் கண்டு கொள்ளலாம். இதன் தன்மையில் எம்மிடையே இரண்டு வினாக்கள் தோன்றுகின்றன ஐயுரப்படுகின்ற அறிவுகள் பௌதிகம் சார்ந்த அறிவுகளாகவும் ஐயுறப்பட முடியாத அறிவுகள் பௌதீக அதிதம் சார்ந்த அறிவினையும் எமக்கு மெய்யியல் வரலாறு எடுத்துக்காட்டுகின்றது. ஐயுற முடியாத அறிவு நம்பிக்கை என்ற தன்மையில் கட்டியெழுப்பப்படுகின்றன. இதன் தன்மையில் இன்றும் நம்பிக்கை என்பதன் அடிப்படையில் சில அறிவுகளை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொள்கின்றோம். இவை மரபு ரீதியான பரம்பரையின் தன்மைக்குள் உட்படுத்தப்பட்டு எம்மிடம் ஆழ்மனதில் பதிந்த நம்பிக்கைக்குரிய விடயங்களாக அமைகின்றன. இவற்றினை நாம் ஏற்கின்றோம். அதேவேளை, எம்முடைய சமூகத்திற்கும் இதனை விட்டுச் செல்கின்றோம். இவற்றினை விட்டுவிடுவதா? அல்லது ஏற்றுக்கொள்வதா? என்பதும் சங்கடம் கொண்ட தன்மையாகவே அமைகின்றது.


நவீன காலத்தில் நம்பிக்கை, பௌதிக அதீதம் கொண்ட அறிவு என்பவற்றினை களைந்து மனிதன் அறிவினை எவ்வாறு பெறுகின்றான். அவனுடைய அறிவு எப்படி ஏற்புடையது என்பதன் அடிப்படையில் அனுபவ முதல் வாதம்/ அறிவு முதல் வாதம் என்ற இரண்டு போராட்டங்கள் அறிவாராட்ச்சியில் தோற்றம் பெற்றன. இவற்றினை மையமாகக் கொண்டு அனுபவ முதல் வாதிகளும், அறிவு முதல் வாதிகளும் அறிவினை இம்முறைகள் மூலமே பெறமுடியும் என்பதனை எமக்குக் காட்டியுள்ளனர். இதன் தன்மையில் அறிவு முதல் வாதத்தினை முன்னெடுத்துச் சென்ற மூன்று அறிவு முதல் வாதிகள் முக்கியப்படுத்தப்படுகின்றனர். டேக்கட்டி ஸ்பினேசர், லைப்பினிஸ்ட் என்பவர்களாவர். அறிவு முதல் வாதிகள் மனிதன் பிறக்கின்ற போதே அறிவுடன் பிறக்கின்றான் என்றும் அவனுடைய பகுத்தறிவு என்பது அவனுடன் உடன் பிறந்த அறிவாகக் காணப்படுகிறது எனவும் எடுத்து விளக்குகின்றனர். இதன் அடிப்படையில் இருந்து வேறுபடுகின்ற அனுபவ முதல் வாதிகள் மனிதன் அனுபவ முறையின் அடிப்படையில் அறிவு பெறப்படுகின்றது எனவும் அனுபவம் புலன்சார் முறையினால் மட்டுமே சாத்தியம் எனவும் குறிப்பிடுகின்றனர். இவ் அனுபவத்தினை முதன்மைப்படுத்துகின்ற அனுபவ முதல் வாதிகளாக ஜோன் லொக், ஜோர்ஜ்பாக்லி, டேவிட்கியூம் என்போர் முதன்மை பெறுகின்றனர் எனலாம். அனுபவ முதல் வாதிகள். மனிதன் பிறக்கின்ற போதே வெற்றுக்கடதாசி போலவே அல்லது வெற்றுக் கரும்பலகை போலவே பிறக்கின்றனர். அவனுடைய அறிவுக்குக் காரணம் மனமும் புலனும் இணைந்து பெறப்படுகின்ற தகவல்களே புலப்பதிவுகள் ஆகும். அவையே அறிவினைப் பெற்றுத் தருகின்றன எனலாம்.

இதன் அடிப்படையில் மனிதனிடத்தில் உள்ள புலன்சார் பகுதிகள் யதார்த்த தோற்றப்பாட்டினை பிரதிபலிப்பதாகக் கொண்டு அமைகின்றன. என்பதனை முதன்மைப்படுத்துகின்ற போது தொகுத்தறி முறைமையின் அடிப்படையில் புலன் தரவுகளை ஒழுங்கமைத்து அவற்றிலிருந்து பொது உண்மைகளை முடிவுகளாகப் பெறுதல் சாத்தியம் என வாதிடுகின்றனர். ஆனால், மனிதன் பிறக்கின்ற போதே அறிவுடன் அதாவது உடன்பிறந்த எண்ணங்கள் காரணமாக அமைகின்றன. இதனால்தான் மனிதன் பிறந்தவுடன் செய்யப்படுகின்றநிலை அவனுடைய எண்ணத்தில் இருந்து தோற்றம் பெறுகின்றது என்பதையும் காரணம் காட்டுகின்றனர். இதன் தன்மையில் இருந்து இரண்டு அறிவுசார் முறைகளுக்கும் இடையில் பல்வேறான போராட்டங்கள் நிறைந்தவையாக அறிவாராட்ச்சியில் ஒரு திருப்பு முனையாகக் காணப்படுகின்றன எனலாம்.

அறிவு முதல் வாதிகள் (கருத்து முதல் வாதத்தினை) முதன்மைப்படுத்துகின்றனர். ஆனால், அனுபவ முதல் வாதிகள் கருத்து முதல் வாதத்தினை முதன்மையாக மறுக்கின்றனர். அதேவேளை, பொருள் முதல் வாதத்தினை ஏற்கின்றனர். இதன் அடிப்படையில் விஞ்ஞானத்திற்குரிய அடிப்படை வாதமாக அனுபவ முதல் வாதம் அமைகின்றது. அறிவு முதல் கொள்கையானது உண்மையான அறிவுக்கு ஆதாரமாக அமைவதாகும். அதாவது நிலையான அறிவினைப் பெறுவதற்கு ஆதாரமாக இருப்பது சிந்தனை ஆகும். அதேவேளை, நியமம் கூறும் விஞ்ஞானத்தின் செயற்பாடுகளை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு காரணமாக அமைவது. சிந்தனைகளை சமூக மதிப்பீட்டுக்கு ஏற்றவாறு பயன்படுத்துகின்றது.

இவற்றில் உள்ள துறைகளாக மெய்யியல், சமயம், ஒழுக்கவியல், அழகியல் போன்ற துறைகள் உண்மை பொய் என்பதற்கு மேலாக மதிப்பீட்டுப் பெறுமான நோக்கில் ஆய்வு செய்யக்கூடிய தன்மையில் உள்ளன. திருத்தமான முடிவினைப் பெறுவதற்கு ஏதுவாக சிந்தனை முக்கியம் பெறுகின்றது.

(நாளை தொடரும்...)



‘CMA Excellence ஒன்றிணைந்த அறிக்கையிடல் விருதுகள் 2023’ இல்

# SLT-MOBITEL பிரகாசிப்பு







SLT-MOBITEL, பெருமைக்குரிய CMA சிறப்பு ஒன்றிணைந்த அறிக்கையிடல் விருதுகள் 2023 நிகழ்வில் கௌரவிப்பைப் பெற்றுக் கொண்டது. வெளிப்படையான தொடர்பாடல் மற்றும் பங்காளர் ஈடுபாடு ஆகியவற்றில் நிறுவனம் கொண்டுள்ள அர்ப்பணிப்பிற்காக இந்த கௌரவிப்புகளை SLT-MOBITEL பெற்றுக் கொண்டது.

SLT-MOBITEL இரு விருதுகளைப் பெற்றுக் கொண்டது. தொலைத்தொடர்பாடல் துறையில் சிறந்த ஒன்றிணைக்கப்பட்ட அறிக்கை மற்றும் ஒட்டுமொத்தப் பிரிவுகளில் மெரிட் விருது ஆகியன அவையாகும். SLT-MOBITEL இனால் பேணப்படும் வெளிப்படையான தொடர்பாடல் மற்றும் பங்காளர் ஈடுபாட்டுக்கான அர்ப்பணிப்பை உறுதி செய்து வெளியிட்டிருந்த சிறந்த ஒன்றிணைந்த அறிக்கைக்காக சிறந்த ஒன்றிணைப்பு அறிக்கையிடல் விருது வழங்கப்பட்டிருந்தது. மேலும், ஒன்றிணைக்கப்பட்ட அறிக்கையிடலில் சர்வதேச சிறந்த செயற்பாடுகளை பின்பற்றுகின்றமைக்கு நிறுவனம் கொண்டுள்ள அர்ப்பணிப்பை உறுதி செய்யும் வகையில் ஒட்டுமொத்த மெரிட் விருதை வென்றிருந்தமை அமைந்துள்ளது.

கூட்டாண்மை ஆளுகை, நிலைபேறாண்மை மற்றும் பொறுப்புக்கூரல் ஆகியவற்றில் உயர் நியமங்களை பேணுகின்றமைக்கு SLT-MOBITEL காண்பிக்கும் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கும் வகையில் இந்த விருதுகள் அமைந்துள்ளன. பங்காளர்களுக்கு தெளிவான மற்றும் முழுமையான வினைத்திறன் பற்றிய தரவுகளை வழங்கும் வகையில் நிறுவனம் காண்பிக்கும் அர்ப்பணிப்பையும் இந்த விருதுகள் உறுதி செய்துள்ளன.

இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடைபெற்றது. பல்வேறு துறைகளைச் சேர்ந்த சிறந்த பங்களிப்புகளை கௌரவிக்கும் வகையில் அமைந்திருந்தது. இலங்கையின் பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத நிறுவனங்கள் மற்றும் அரச உரிமையாண்மையில் இயங்கும் நிறுவனங்களை ஒன்றிணைந்த அறிக்கையிடலை பின்பற்றுவதற்கு ஊக்குவிக்கும் வகையில் இந்த ஒன்றிணைந்த அறிக்கையில் சிறப்பு விருதுகள் வழங்கும் நிகழ்வு ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது. செயன்முறையாக, முதலீட்டாளர்கள் மற்றும் பங்காளர்களுக்கு பெறுமதி வாய்ந்த உள்ளார்ந்த தகவல்களை உருவாக்கி, தக்க வைத்து அல்லது வெளிப்படுத்துவது என்பது தொடர்பான தகவல்களை வழங்குவதாக அமைந்துள்ளது. ஒன்றிணைந்த அறிக்கையிடல் என்பது சகல பங்காளர்கள், ஈடுபாட்டைக் கொண்ட ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், விநியோகத்தர்கள், வியாபார பங்காளர்கள், உள்நாட்டு சமூகத்தார், சட்டவாக்குநர்கள், ஒழுங்குபடுத்துநர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் ஆகியோரின் ஈடுபாட்டை, நிறுவனத்தின் நீண்ட கால பெறுமதி உருவாக்க செயன்முறையை உறுதி செய்வதாக அமைந்திருக்கும்.

2013ஆம் ஆண்டில் சர்வதேச ஒன்றிணைந்த அறிக்கையிடல் சம்மேளனத்தினால் வெளியிடப்பட்டு 2021இல் மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட சர்வதேச ஒன்றிணைந்த அறிக்கையிடல் கட்டமைப்புக்கு பொருத்தமான வழிமுறைகளை பின்பற்றி ஒன்றிணைந்த அறிக்கைகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

இந்த மதிப்பீட்டில் நிதிசார் தகவல்கள் மாத்திரம் கவனத்தில் கொள்ளப்படாமல், நிதிசாரா விடயங்களுகம் இதர அளவிடப்படக்கூடிய அம்சங்களும் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

இந்த கௌரவிப்புகளினூடாக தொலைத்தொடர்பாடல் துறையில் மாத்திரம் SLT-MOBITEL இன் தலைமைத்துவம் உறுதி செய்யப்படாமல், வெளிப்படைத்தன்மை, நம்பிக்கை மற்றும் நிலைபேறாண்மை ஆகியவற்றை முக்கிய அம்சங்களாகக் கொண்ட பரந்த கூட்டாண்மை துறையிலும் தலைமைத்துவ ஸ்தானத்தை கொண்டுள்ளமை மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

படம்: SLT-MOBITEL அணியினர் ஒன்றிணைக்கப்பட்ட அறிக்கையிடல் விருதுகள் 2023 இல் CMA சிறப்பு விருதை பெற்றுக் கொள்வதை காணலாம்.

Sunshine Holdings PLC இன்

# சிறுவர் தின கொண்டாட்டம்

Sunshine Holdings PLC சர்வதேச சிறுவர்கள் தினத்தை அண்மையில் கொண்டாடியது. இந்த நிகழ்வு 16 வயதுக்குட்பட்ட SUN ஊழியர்களின் குழந்தைகளுக்கு சந்தோஷம் நிறைந்த தருணமாக இருந்தது. அவர்கள் நாள் முழுவதும் வேடிக்கை, படைப்பாற்றல் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களிலும் ஈடுபடுத்தப்பட்டனர்.

Sunshine Holdings PLC குழந்தைகளின் திறன் மற்றும் வாக்குறுதியின் மீது வலுவான நம்பிக்கை கொண்டுள்ளது, அவர்களை ஒரு ஆசீர்வாதமாகவும் பிரகாசமான எதிர்காலத்திற்கான நம்பிக்கையாகவும் கருதுகிறது. சர்வதேச சிறுவர்கள் தின கொண்டாட்டம் இந்த உறுதிப்பாட்டிற்கான ஒரு சான்றாக இருந்தது, பெற்றோர்களுடன் சேர்ந்து குழந்தைகள் உற்சாகம் மற்றும் மகிழ்ச்சியால் நிரப்பப்பட்ட நாளில் பங்கேற்க கூடினர்.



இந்த நிகழ்வு பல்வேறு வகையான நடவடிக்கைகளை உள்ளடக்கியிருந்ததுடன், ஒவ்வொரு குழந்தையும் விரும்பும் ஏதாவது ஒன்றைக் கண்டறியும் வகையில் உறுதி செய்தது. வண்ணமயமான முகச் சித்திரம் வரைதல் அமர்வுகளில் இருந்து மிகவும் கவனத்தை ஈர்க்கும் கலை, நடனம் மற்றும் பாட்டு போட்டிகள், உற்சாகமூட்டும் விளையாட்டுக்கள், ஒரு கவர்ச்சிகரமான மாயாஜால நிகழ்ச்சி மற்றும் ஒரு Fancy Dress போட்டி வரை, குழந்தைகள் பல்வேறு பொழுதுபோக்கு உலகை அனுபவித்து மகிழ்ந்தனர்.

இந்த சிறுவர் தின கொண்டாட்டத்தின் இறுதி நிகழ்வாக கலை, பாடல் மற்றும் நடனப் போட்டிகளின் வெற்றியாளர்களை தெரிவு செய்து அவர்களுக்கு பரிசில் வழங்குதல் நடைபெற்றது, அங்கு திறமையான சிறுவர்கள் அவர்களது திறமைகள் மற்றும் படைப்பாற்றலுக்காக கௌரவிக்கப்பட்டனர்.

Sunshine Holdings PLC இல் இந்த சிறுவர்கள் தின கொண்டாட்டம், குழந்தைகளுக்கு ஆதரவான மற்றும் ஊக்கமளிக்கும் சூழலை உருவாக்கி, ஊழியர்களுடனான உறவை வலுப்படுத்த அமைப்பின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியது. இது உன்னதமான நினைவுகளை உருவாக்கி, எதிர்காலம் இந்த இளம், நம்பிக்கைக்குரிய தனிநபர்களுக்கு சொந்தமானது என்ற நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்த ஒரு நாளாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாமல்லபுரம்

# நுழைவுக் கட்டணம் ஒரு நாளைக்கு இல்லை

உலக பாரம்பரிய வார விழாவை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை (19) இந்தியாவின் - மாமல்லபுரத்தில் உள்ள புராதன சின்னங்களைக் காண கட்டணம் வசூலிக்கப்படாது என தொல்லியல் துறை அறிவித்துள்ளது.

மாமல்லபுரத்தில் பல்லவ மன்னர்களின் சிற்பக்கலையை உலகுக்கு பறைசாற்றும் வகையில் ஐந்துரதம், கடற்கரை கோயில், கிருஷ்ண மண்டபம், அர்ஜுனன் தபசு ஆகிய சிற்பங்கள் உள்ளன.

இவற்றை கண்டு ரசிப்பதற்காக, உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து ஆயிரக்கணக்கானோர் வந்து செல்வதால், மாமல்லபுரம் சர்வதேச புகழ்பெற்ற சுற்றுலா தலமாக விளங்கி வருகிறது. மேலும், சுற்றுலாவை



சார்ந்த தொழிலாளர்களின் வாழ்வாதாரமாகவும் மாமல்லபுரம் காணப்படுகிறது.

பல்லவர் காலத்தில் பிரபலமாக இருந்த பிரம்மாண்டத்தை பிரதிபலிக்கும் பழைமையான கோயிலை உலக பாரம்பரிய தளங்களின் பட்டியலில் சேர்த்துள்ளது. இந்த பாறைக் கோயில்கள் தென்னிந்தியாவின் புனிதமான இடங்களில் ஒன்றாகவும் கருதப்படுகிறது.

மாமல்லபுரத்தில் புராதன சின்னங்களை கண்டு ரசிக்க உள்நாட்டு பயணிகளுக்கு ஒரு நபருக்கு ரூ.40வும், வெளிநாட்டு பயணிகளுக்கு ரூ.600வும் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

இந்நிலையில், உலக பாரம்பரிய வார விழாவை முன்னிட்டு தொல்லியல் துறை கட்டணச் சலுகையை அறிவித்துள்ளது. அதன்படி, வெண்ணெய் உருண்டைக்கல், அர்ச்சுனன் தபசு, ஐந்து ரதம், கடற்கரை கோவில் உள்ளிட்ட புராதன சின்னங்களை ஒரு நாள் நுழைவுக் கட்டணம் ஏதுமின்றி சுற்றுலா பயணிகள் கண்டு ரசிக்கலாம் என தெரிவித்துள்ளது.

மும்பை

# வளையல்கள் அணிந்த பெண் மீது தாக்குதல்

திருமணமான பெண்ணொருவர் பல வர்ணங்களில் வளையல் அணிந்ததால், கணவர் மற்றும் அவரது உறவினர்கள் அந்த பெண்ணை கண்முடித்தனமாக தாக்கியுள்ள சம்பவமொன்று மும்பை - நவி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

புனே நகரை சேர்ந்த 23 வயது பெண் அளித்த புகாரின் அடிப்படையில் கணவர் மற்றும் உறவினர்கள் மீது வழக்கு பதிவு



செய்யப்பட்டுள்ளதாக நவி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பெண் அளித்த புகாரின்படி, பாதிக்கப்பட்ட பெண்ணின் கணவர் பிரதீப் ஆர்கடே (30) அவர் மாடர்னாக வளையல்களை அணிந்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து அவருடன் பிரச்சினை செய்து வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

“இந்த சம்பவத்திற்குப் பிறகு, பாதிக்கப்பட்ட அந்த பெண் புனேவில் உள்ள தனது பெற்றோரின் வீட்டிற்குச் சென்று அங்குள்ள பொலிஸில் புகார் அளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கரடியினால் அசௌகரியம்



இந்தியாவின் ஜம்மு-காஷ்மீர் பகுதியில் கரடி தாக்கியதில் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

ஜம்மு-காஷ்மீர், கிஷ்த்வார் மாவட்டத்தில் குலாம்ஹுசைன் சோஹன் (60) மற்றும் பாபி சந்த் (57) ஆகியோர் தங்கள் வயல்களில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தபோதே அவர்களை கரடி தாக்கியுள்ளது.

காயமடைந்தவர்கள் இருவரும் மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், வனவிலங்கு துறை அதிகாரிகள் கிராமங்களுக்கு சென்று பார்வையிட்டுள்ளதோடு, கரடிகளை பிடிப்பதற்கான முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




அந்தார்ட்டிகா

# அண்டார்டிகாவில் விமானம் தரையிறங்கி உலக சாதனை

அண்டார்டிகாவில் கண்டம் பனியால் சூழப்பட்டுள்ள மனிதர்கள் வசிக்க முடியாத நிலப்பரப்பாகும். எனவே, ஆய்வுக்காக மட்டுமே இந்த பகுதியை பயன்படுத்தி வருகிறார்கள். பல இலட்சம் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த உயிரினங்கள், தாவரங்களின் படிமங்கள் இங்கு பாதுகாக்கப்படுன்றன.

இந்நிலையில், பனிசூழ்ந்த அண்டார்டிகாவில் பயணிகள் விமானமொன்று தரையிறங்கி உலக சாதனை படைத்துள்ளது.

நார்ஸ் அட்லாண்டிக் எயார்வேஸ் விமான நிறுவனத்தின் போயிங் 787 ட்ரீம்லைனர் விமானத்தை கடந்த 15ஆம் திகதி அண்டார்டிகாவின் குயின் மவுட் லேண்ட் எனும் இடத்தில் விமானிகள் தரையிறக்கி சாதனை படைத்துள்ளனர். நோர்வே நாட்டிலிருந்து நோர்வே போலார் இன்ஸ்டிடியூட் விஞ்ஞானிகள் உட்பட 45 விஞ்ஞானிகள் மற்றும் ஆய்வுக்கு தேவையான பொருட்கள் உணவு என 12 தொன் எடையுள்ள பொருட்களுடன் புறப்பட்ட இந்த விமானம், தென் ஆபிரிக்காவின் கேப்டவுனில் தரையிறங்கி எரிபொருளை நிரப்பியுள்ளதோடு, அங்கிருந்து அண்டார்டிகாவில் தரையிறங்கியுள்ளது. விமானம் தரையிறங்கிய பனி ஓடுபாதையானது கிட்டத்தட்ட 2 மைல் நீளம் (3கிமீ) மற்றும் 200 அடி அகலம் கொண்டதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா

# ஒலியலைத் தாக்குதல் நடத்தியது சீனா

அவுஸ்திரேலியாவின் கடற்படை வீரர்கள் மீது சீனா ஒலியலைத் தாக்குதல் நடத்தியதாக அவுஸ்திரேலியா குற்றஞ்சாட்டியுள்ளது.

இது குறித்து அந்த நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சர்வதேசக் கடல் எல்லையில் அமைந்துள்ள ஜப்பானின் சிறப்புப் பொருளாதார மண்டலம் வழியாகச் சென்று கொண்டிருந்த H.M.A.S டுவூம்பா கடற்படைக் கப்பலின் ‘புரொப்பல்லர்’ல்ர்களில் மீன்வலை சிக்கிக் கொண்டது. அதனை நீக்குவதற்காக கடற்படை வீரர்கள் கடலுக்குள் குதித்தனர். அப்போது சீன கடற்படைக் கப்பலில் இருந்த ஒலியலைக் கருவி இயக்கப்பட்டது. இதில் அவுஸ்திரேலியா கடற்படை வீரர்கள் காயமடைந்தனர். மேலும் சீனாவின் இந்த நடவடிக்கை மிகவும் கவலையளிப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





சிநேகபூர்வ போட்டியில்

# துருக்கியிடம் தோற்ற ஜேர்மனி

தமது நாட்டில் நேற்று அதிகாலை நடைபெற்ற துருக்கியுடனான சிநேகபூர்வ போட்டியில் 2–3 என்ற கோல் கணக்கில் ஜேர்மனி தோற்றது.

துருக்கி சார்பாக, பெர்டி கடியொக்லு, கெனன் யில்டிஸ், யூசுப் சாரி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். ஜேர்மனி சார்பாக கை ஹவேர்ட்ஸ், நிக்கலஸ் புல்குறூக் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



# சவூதி செல்லும் மோட்ரிச்?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்ரிட்டின் மத்தியகளவீரரான லூகா மோட்ரிச், மட்ரிட்டுடனான தனது ஒப்பந்தமானது நடப்புப் பருவகாலத்துடன் முடிவடையும்போது சவூதி அரேபியக் கழகமொன்றுக்கு விளையாடத் தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

நடப்புப் பருவகாலத்தில் மட்ரிட்டுக்காக தொடர்ச்சியாக 38 வயதான மோட்ரிச் போட்டிகளை ஆரம்பிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




சீரற்ற காலநிலையால்

# வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்த மதீனா திருத்துவ கல்லூரி போட்டி

அஸ்ஹர் இப்ராஹீம்

இலங்கை பாடசாலைகள் கிரிக்கட் சம்மேளனம் நடத்தும் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான 13 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கடினபந்து கிரிக்கெட் தொடரில், கண்டி பொறமதுல்ல மத்திய கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற மடவல அல் மதீனா தேசிய கல்லூரிக்கும், கண்டி திருத்துவக் கல்லூரிக்குமிடையிலான போட்டியானது சீரற்ற காலநிலையால் வெற்றி தோல்வியின்றி நிறைவுக்கு வந்தது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மடவல அல் மதீனா தேசிய கல்லூரி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஸஸாட் 34 நான்கு ஓட்டங்கள் உள்ளடங்கலாக 148 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

பதிலுக்கு 223 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கண்டி திருத்துவக் கல்லூரி 29 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 87 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் சீரற்ற காலநிலை காரணமாக போட்டி இடைநிறுத்தப்பட்டு வெற்றி தோல்வியின்றி போட்டி நிறைவுக்கு வந்தது.



டெஸ்ட் போட்டிகளுக்கான

# பங்களாதேஷின் அணித்தலைவராக ஷன்டோ

நியூசிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான பங்களாதேஷின் அணித் தலைவராக நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

பங்களாதேஷ் இறுதியாக விளையாடிய டெஸ்ட் போட்டியான ஆப்கானிஸ்தானுக்கெதிரான போட்டியில் பங்களாதேஷுக்குத் தலைமை தாங்கிய லிட்டன் தாஸுக்கு ஒரு மாதம் பிரசவகால விடுப்பு வழங்கப்பட்டுள்ள நிலையிலேயே பங்களாதேஷுக்கு ஷன்டோ தலைமை தாங்கவுள்ளார்.

இதேவேளை, விரல் முறிவடைந்தமை காரணமாக லிட்டனுக்கு முதல் அணித்தலைவராக இருந்த ஷகிப் அல் ஹஸனும் இத்தொடரில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

குழாம்:

நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ (அணித்தலைவர்), மஹ்முடுல் ஹஸன் ஜோய், ஸகிர் ஹஸன், ஷட்மன் இஸ்லாம், மொமினுல் ஹக், முஷ்பிக்கூர் ரஹீம், நுருல் ஹஸன் சொஹான், மெஹிடி ஹஸன் மிராஸ், தஜியுல் இஸ்லாம், நயீம் ஹஸன், சைட் காலிட் அஹ்மட், ஷொரிஃபுல் இஸ்லாம், ஹஸன் மஹ்மூட், ஷடாட் ஹொஸைன் டிப்பு, ஹஸன் முராட்.



# இன்டர் மியாமிக்குச் செல்லும் டி கியா?

சவுதி அரேபிய கால்பந்தாட்டக் கழகமான அல்-நஸாரின் வாரமொன்றுக்கு 500,000 ஸ்டேர்லிங் பவுண்ஸ்கள் ஒப்பந்தத்தை நிராகரித்துள்ள இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்னாள் கோல் காப்பாளரான டேவிட் டி கியா, ஐக்கிய அமெரிக்காவின் மேஜர் லீக் சொக்கர் தொடரின் இன்டர் மியாமிக்குச் செல்ல எதிர்பார்த்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 20 நவம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.